முதலாவது மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், கடலூர்

அசல் வழக்கு எண் 102 /2016 நாள் 14.10.2024

பி.வா.சா.1 --- காமராஜ்

பி.வா.சா 1 மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, 5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டார்.

5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை :-

இந்த வழக்கில் 5 ம் பிரதிவாதி விசாலாட்சி அவருடைய எதிருரையில் கூறியுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அந்த விவரங்களில் எனக்கு மாறுபட்ட கருத்து ஏதேனும் உண்டா என்றால், உண்டு. என் தாத்தா பெயர் அண்ணாமலை. அவர் 24.08.2010 -ல் இறந்துவிட்டார். அவர் 24.11.2000 ல் ஒரு பதிவு செய்யப்பட்ட உயிலாவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அவர் தன்னுடைய சொத்துக்கள் அனைத்தையும் உயில் எழுதி வைத்துவிட்டார் என்றால் சரியல்ல. சுமார் 3 ஏக்கர் நிலம் உயில் எழுதப்படாமல் இருக்கிறது. ஆனால் அதில் சில சொத்துக்களை விற்றுவிட்டார். விற்றதுபோக மீதமுள்ள சொத்துக்கள் காடாம்புலியூர் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். அதில் எனக்கும் வாதிகளுக்கும், 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கும் பாகம் உண்டு என்றால் சரிதான். 2010 ல் என் தாத்தா இறந்தவுடன் பால்தெளி அன்று அவருக்கு பாத்தியமான பீரோ உடைத்து திறக்கப்பட்டது. அந்த பீரோவில் உயில் இருந்தது என்றால் எனக்கு ஞாபகமில்லை. பீரோவை திறக்கும்போது நான், ராஜதுரை, வாதிகள் வாசுகி, ராஜசேகரி, மற்றும் வீதிவிடங்கன், ராஜா, ராஜி, மதியழகன், ராமலிங்கம் ஆகியோர் இருந்தோம் என்றால் நானும் ராஜதுரையும் தான் இருந்ததாக ஞாபகம். மேற்படி நபர்கள் முன்னிலையில் பீரோ உடைக்கப்பட்டு அதிலிருந்து இந்த வழக்கு சம்மந்தப்பட்ட உயில், பணம் , வங்கி கணக்கு புத்தகம், பாண்டு பேப்பர், நகை 50 சவரன், ரொக்கபணம் 25,500/- ஆகியவை எடுக்கப்பட்டது என்றால், நான் ஓரமாக நின்றிருந்ததால், என்னென்ன எடுத்தார்கள் என்று எனக்கு

தெரியாது. அசல் உயில் ராஜதுரையிடம் இருப்பதாக கேள்விப்பட்டேன். நான் மற்றொரு நபர் மூலமாக ராஜதுரையிடம் அசல் உயிலை கேட்டதற்கு அவர் தர மறுத்துவிட்டார். நான் பால்ராஜ் என்பவர் மூலமாக சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ராஜதுரையிடம் கேட்க சொன்னேன். அப்போது ராஜதுரை வெளிநாட்டில் இருந்ததால் ராஜதுரை அம்மாவிடம் அவர் கேட்டுள்ளார். ராஜதுரையின் அம்மாதான் அசல் உயில் தர மறுத்துவிட்டதாக சொன்னார். அந்த உயிலில் கண்டுள்ளபடி சொத்துக்களை அவரவர் அனுபவித்து வருகிறோமா என்றால் ஆமாம். 2000 வருடத்திலேயே அந்த சொத்துக்களை என் தாத்தா பிரித்துக்கொடுத்துவிட்டதால் அவரவர் அந்தந்த சொத்துக்களை அனுபவித்து வருகிறோம். 2000 வருடத்திலேயே யார் யாருக்கு எந்தெந்த சொத்துக்கள் கொடுத்திருப்பதாக என் தாத்தா சொல்லிவிட்டாரா என்றால் ஆமாம். 2010 ல் பீரோ உடைக்கப்பட்டபோது அதிலுள்ள பொருட்கள் வீதிவிடங்கன் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டு, காரியம் முடிந்தபின் பிரித்துக்கொள்ளலாம் என்று முடிவெடுக்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. 6 ம் பிரதிவாதி ராஜதுரை வெளிநாட்டில் வேலை செய்கிறார் என்றால் அப்படிதான் கேள்விப்பட்டேன். அவர் என் அப்பாவின் தம்பி மகன். எனக்கு தம்பி முறை. 2013 ல் ராஜதுரை வெளிநாடு போவதற்கு முன்பு வீதிவிடங்கனிடம் கொடுத்து வைக்கப்பட்டிருந்த பொருட்களை நான் சொன்னதன் பேரில் மதியழகன், ராமலிங்கம் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டு, அவர்கள் மூலம் அவை என்னிடம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் D -அட்டவணையில் உள்ள ரூ.20 லட்சம் பணம் லட்சுமிவிலாஸ் வங்கியில் சேமிப்பு கணக்கில் உள்ளது என்றால் பணம் உள்ளது, எவ்வளவு பணம் என்று தெரியாது. அந்த வங்கியின் பெயர் தற்போது DBS வங்கி என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் F அட்டவணையில் உள்ள வைப்பு நிதிகள் எந்த வங்கியில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. D, E, F அட்டவணையில் கண்டுள்ள ரொக்கதொகைகளை

பாகம்பிரிப்பதில் எனக்கு ஆட்சேபணை இருக்கிறதா என்றால், அந்த சொத்துக்களுக்கு என்னை நாமினியாக போட்டுள்ளதால் எனக்கு மட்டும்தான் அவற்றில் உரிமை உள்ளது. நான் என்னுடைய எதிருரையில் மேற்படி சொத்துக்கள் பாகம் பிரிக்க ஆட்சேபணை இல்லை என்று பத்தி 4-ல் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான், பிக்ஸட் டெபாசிட்டில் உள்ள தொகையை பிரிப்பதில் ஆட்சேபணை இல்லை என்று தான் சொல்லியுள்ளேன். D, E, F அட்டவணை சொத்துக்கள் பாகம் பிரிக்கப்படவேண்டிய சொத்துக்கள்தான் என்றாலும், E, F அட்டவணை சொத்துக்கள் என் வசம்தான் உள்ளது என்றாலும், அவை எல்லோருக்கும் பாகம் பிரித்து தரப்படவேண்டியவை என்றாலும், சரியல்ல. வாதி வாசுகி அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அனுபவித்து வந்து, தற்போது குத்தகைக்கு விட்டு அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். ஆனால் இந்த வருடம் ராஜசேகரியின் மகள்தான் குத்தகைக்கு அனுபவித்து வருகிறார். 6 ம் பிரதிவாதி ராஜதுரை அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அனுபவித்து வருகிறார் என்றால், சரிதான்.

7 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

என் தாத்தா எந்தெந்த தேதிகளில் எவ்வளவு தொகை டெபாசிட் செய்துள்ளார் என்ற விவரங்கள் தெரியாது. ஆனால் பணம் டெபாசிட் செய்துள்ளார் என்ற விவரம் மட்டும் தான் தெரியும். அவர் சேமிப்பு கணக்கில் எவ்வளவு தொகை வைத்திருந்தார் என்றும், நிரந்தர வைப்பீட்டில் எவ்வளவு தொகை வைத்திருந்தார் என்றும், தெரியாது. எத்தனை வங்கி கணக்குகளில் என்னை நாமினியாக போட்டுள்ளார் என்றால், சேமிப்பு கணக்கில் மட்டும் என்னை நாமினியாக போட்டுள்ளார். நிரந்தர வைப்பீட்டில் யார் யாரை நாமினியாக போட்டுள்ளார் என்று எனக்கு தெரியாது. 2016 ல் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மேற்படி விவரங்களை வங்கியில் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். என் தாத்தா பணம் சம்மந்தமாக உயில் எதுவும் எழுதி வைக்கவில்லை.

அதனால் வங்கியில் உள்ள தொகைகள் அனைத்தும் வாரிசுகளுக்கு சமமாக கிடைக்கவேண்டும் என்றால் சரியல்ல.

வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை வேண்டுகோளின்பேரில் ஒத்திவைக்கப்பட்டது.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-G.Vijayakumar*
*I Additional District Judge*
*Cuddalore.*